**தலைப்பு – 268 - கிளிநொச்சி மாவட்ட செயலகம் / கச்சேரி மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2014**

---

இந்த அறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் கிளிநொச்சி மாவட்ட செயலகம்/ கச்சேரியின் கணக்குகள் மீதான பொதுவான தகவல்களை கொண்டுள்ளதுடன் முதல் 3 பந்திகளில் கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

**1. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) பூநகரி
(ஆ) கரைச்சி
(இ) பச்சிலைப்பள்ளி
(ஈ) கண்டாவளை

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு

உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்ட செயலகத்தின் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 187 மில்லியனானதுடன் அதில் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 182.81 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, தேறிய ஏற்பாட்டின் சேமிப்புக்கள் ரூபா 4.19 மில்லியன் அல்லது தேறிய ஏற்பாட்டின் 2.24 சதவீதமாகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 145.45 | 141.38 | 4.073 | 2.8 |
| மூலதனம் | 41.55 | 41.43 | 0.12 | 0.28 |
| மொத்தம் | **187.00** | **182.81** | **4.19** | **2.24** |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 17 அமைச்சுக்கள் மற்றும் 13 திணைக்களங்களிடமிருந்து ரூபா 262.36 மில்லியன் மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 247.01 மொத்தமான தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, சேமிப்புக்கள் ரூபா 2.11 மில்லியனாக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகள் 0.8 சதவீமாக இருந்தது.

**2.2 முற்பண கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

மாவட்ட செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | செலவினம் மீதான உச்ச எல்லை | உள்ள படியானது | செலவினம் மீதான இழிவு எல்லை | உள்ள படியானது | வரவு மீதி மீதான உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26801 | 12.00 | 10.35 | 6.00 | 10.03 | 49.00 | 41.22 |

**2.2.2 கட்டுநிதிக் கணக்கு**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 7002/0/0/0/286/14 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 333,811 ஆகும்.

**2.3 பொது வைப்புக் கணக்கு**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0044 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 32,851,256 ஆகும்.

**2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் 3 முதல் 7.2 ஆம் பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புக்களும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது எனவும் அவற்றில் பந்தி 3:1 இலிருந்து 3:11 வரையான பந்திகளில் காணப்படுகின்ற அந்த முகாமைத்துவ அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொருண்மை மற்றும் முக்கியமான

அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

## 3. தலைப்பு - 268- மாவட்ட செயலகம்/ கச்சேரி, கிளிநொச்சி

### 3.1 கணக்குகளின் சமர்ப்பிப்பு

மாவட்ட செயலகம் 2015 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமான கணக்குகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்த கணக்குகள் 2015 நவம்பர் 30 வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை் பேணாமை

மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துப்பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| கணனிகள், மற்றும் உபபாகங்கள் மீதான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கடன் பதிவேடு (சீசீ 10) | நிதிப்பிரமாணம் 506 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசி அழைப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1), 845(3) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

----------------------------------------

#### 3.3.1 பாதீட்டு முரண்

-------------------------

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின மதிப்பீடுகள் தனிப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் என்னுடைய முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 10 செலவின தலைப்பின் கீழ் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் பகுதியளவில் பயன்பட்டிருக்கவில்லை. 10 செலவின விடயங்களிலுள்ள மூல ஏற்பாடுகள் ரூபா 1,807,000 ஆல் குறைவடைந்திருந்ததுடன் 05 செலவின விடயங்களிலுள்ள ஏற்பாடுகள் அதே தொகையால் அதிகரித்திருந்தது.

(ஆ) செலவின விடயங்களிற்கு விளக்கங்களிற்கும் இடையில் நிதிகளின் மாற்றத்திற்காக திருப்திகரமான காரணங்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் சேமிப்புக்களிற்காக சமர்ப்பிக்கப்பட்ட காரணங்கள் போதியதாக இருக்கவில்லை.

(இ) ரூபா 725,553 தொகையான செலவினம் தவறுதலாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 07 சந்தர்ப்பங்களில் பல்வேறு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 01 செலவின தலைப்பின் கீழ் ரூபா 1,933,750 தொகையான மூலதன செலவினம் தவறுதலாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 07 சந்தர்ப்பங்களில் மூலதன செலவின் பல்வேறு தலைப்பின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) ரூபா 327,270 தொகையான மீண்டெழும் செலவினம் தவறுதலாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 07 சந்தர்ப்பங்களில் மூலதன செலவினத்தின் பல்வேறு தலைப்பின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

#### 3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

--------------------------------------------------------------------------------------------------------

ரூபா 75,000 தொகையான 285 ஆம் இலக்க தலைப்பு விவசாய திணைக்களத்தால் செய்யப்பட்ட முழு ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

------------------------------

நிதிப்பிரமாணம் 371 ஆம் இலக்கத்தின் பிரகாரம், உரியகாலத்தில் பதவியணி உத்தியோகத்தருக்கு ரூபா 20,000 மாத்திரம் செலுத்த வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், அதற்கு முரணாக ரூபா 915,000 தொகையான உப கட்டுநிதி மேற்குறிப்பிட்ட எல்லையை விஞ்சி 02 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 நிறுவனங்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 7,000,000 கூட்டு மொத்த தொகையான நெற் கொள்வனவு முற்பணங்கள் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஆ) ரூபா 5,576,468 தொகையான தற்காலிக வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதிலிருந்தான சேகரிப்புகள் உரிய அதிகார சபைக்கு திரும்பாமல் வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(இ) பூநகரி வைத்தியசாலைக்காக காணி கொள்வனவு செய்வதற்காக வட மாகாண சபை மாகாண சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்ட ரூபா 3,750,000 ஆன தொகை 2013 மே 28 இல் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 30 வரையும் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக அந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டில் இரு சக்கர உழவு இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக 03 விவசாயிகளிற்கு பொது வைப்புக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 310,900 தொகையான வாழ்வாதார முற்பணம் 2015 நவம்பர் 30 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப்பிரமாண இல 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளைவிட பழமைவாய்ந்த ரூபா 688,171 தொகையான 65 வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2004 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் அவர்களுடைய பதவி வறிதாக்கப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து

பெறவேண்டிய ரூபா 807,595 மொத்தமான கடன் மீதிகளை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 31,600 தொகையான இடர்கடன்கள் சம்பள முறைமுயையில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், பூநகரி பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டின் போது ஒரே உத்தியோகத்தருக்கு ரூபா 31,600 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டது.

**3.7. இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நிதிப்பிரமாண இல. 756 | 2014 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக 95 கிராம சேவகர் அலுவலகங்கள் தொடர்பில் கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளக்கட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| 1999 ஏப்பரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்கம் | காசு மற்றும் களஞ்சியத்தினை கையாளும் ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 17 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒரு போதும் பரிசோதிக்கப்பட்டிருக்காததுடன் சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. |

**3.8 அதிகாரமில்லாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் அரசாங்க அதிபர் பங்களாவில் சீசீரி கமரா வழங்கல் மற்றும் பொருத்துதலிற்காக ரூபா 226,650 ஆன தொகை செலுத்தப்பட்டது.

**3.9 நிதி மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு (வற்) ரூபா 1,205,515**

---

ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்ட நேரத்தில் அவருடைய பெறுமதி சேரி வரி இலக்கத்தின் தகுதிக் காலம் மற்றும் பெறுமதி சேர் வரி பட்டியல் என்பவற்றினைப் பரீட்சிக்காமல் சிவில் வேலைகளிற்காக மாவட்ட செயலகத்தால் ரூபா 1,205,515 கூட்டு மொத்தத் தொகையான பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகள் (வற்) செய்யப்பட்டிருந்தது. எனவே, இது தொடர்பில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மோசடித் தன்மையாக கருதப்பட்டது.

**3.10. முகாமைத்துவ நலிவுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கண்டாவளை பிரதேச செயலக அலுவலக கட்டிட விரிவாக்கலின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தகாரர் ஒப்பந்த கொடுப்பனவிலிருந்து 13 சதவீதம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தார். ரூபா 843,522 தொகையான செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கான இறுதிக் கொடுப்பனவு உடன்பட்ட கழிவினைக் கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், ஒப்பந்தகாரருக்கு ரூபா 109,658 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கிளிநொச்சியில் பயிற்சி நிலையம் கட்டம் III இன் நிர்மாணத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி (எ) இன் பிரகாரம், 2014 நவம்பர் 06 இல் பூர்த்தியாக்ககப்பட வேண்டும். ஆனால், உண்மையில் வேலைகள் 2014 திசெம்பர் 15 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 34 நாட்கள் தாமதம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது (ஞாயிறு தவிர). தாமத கட்டணங்களாக ரூபா 1,852 ஆன

தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி (ஏ) இன் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 158,707 ஆன தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3.11. மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 19 | 16 | 03 |
| மூன்றாம் நிலை | 105 | 84 | 21 |
| இரண்டாம் நிலை | 211 | 146 | 65 |
| ஆரம்ப நிலை | 91 | 55 | 36 |
| | 426 | 301 | 125 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது

மாவட்ட செயலகம் மீளாய்வாண்டு இறுதியளவில் 125 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

*M*